**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

14-6-2013

**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்**
**இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!**

## நாடு பூராவும் மவோஸ்ட், நக்ஸல் வேட்டையை மத்திய, மாநில அரசுகள் நடத்த வேண்டிய நேரமிது!

நேற்று பீகார் மாநிலத்தில் இண்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் ரயிலை வழிமறித்து ஜமூய் மாவட்ட காட்டுப்பகுதியில் மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தி பாதுகாப்பு படைவீரர், மற்றும் காவல்துறை அதிகாரி மற்றும் பயணியை படுகொலை செய்து ரயில்வே பாதுகாப்புப் படைவீரர்களின் ஆயுதங்களைப் பரித்துச் சென்றுள்ளனர். இந்த சம்பவத்தில் ஐந்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மகாராஷ்டிராவிலும், சத்தீஸ்கர் மாநிலத்திலும் நக்ஸல் தாக்குதல் நடந்துள்ளது. மத்திய அரசு, நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைப் புரிந்துகொண்டு விரைந்து செயல்பட வேண்டும். நக்ஸல் இடதுசாரி பயங்கரவாதமானது பாரதம் முழுவதற்குமான பிரச்னையாக உறுவெடுக்கும் முன் விழிப்புடன் செயல்பட்டு பயங்கரவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

முஸ்லீம் பயங்கரவாதம்போல் நாடு பூராவும் பரவவிட்டு மக்கள் பல்லாயிரம் பேர் கொன்று குவித்தபின் வெளிநாட்டின் சதியும், உதவியும் கைகோர்த்த பின்பு ஓட்டு வங்கி அரசியலுக்குப் பயந்து அரைகுறையாக நடவடிக்கை எடுப்பதைப்போல், இடதுசாரி பயங்கரவாதமும் நாட்டின் தலைவலியாகிவிடக்கூடாது என இந்து முன்னணி எச்சரிக்கிறது. பயங்கரவாதத்திற்குக் காரணத்தைத் தேடித் தேடி சமாதானப்படுத்தும் மூடத்தனத்தை மத்திய, மாநில அரசுகள் கைவிட வேண்டும். பயங்கரவாதம் மக்கள் விரோதமானது - ஆயுதம் ஏந்துவது ஒட்டுமொத்த நாட்டின் பாதுகாப்பிற்கும் ஆபத்தானது என்பதை பகிரங்கமாக கண்டிப்பதோடு, மாநில அரசுகளோடு இணைந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தி, அதன் நெட்வோர்க்கை சிதைக்க வேண்டும்.

கடுமையான நடவடிக்கையின் மூலமே பயங்கரவாதத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியும். நேற்று அங்கு நடந்தது, இன்று இங்குதான் நடந்துள்ளது என்று பார்த்துக்கொண்டு மத்திய அரசு இருந்தால், ஒரு நாள் நாடு பூராவும் இந்த இடதுசாரி பயங்கரவாதம் திடீரென்று வெடித்து கிளம்பும்போது அதற்கு பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

பாரதத்தின் எந்தவொரு மாநிலத்திலும் இடதுசாரி பயங்கரவாதம் இல்லை என்று சொல்ல முடியாது. ஏதோ ஒரு சிறு குழுக்களாகவோ, பெரிய குழுக்களாகவோ ஆயுத புரட்சியை நியாயப்படுத்தி மக்களை மூளை சலவை செய்து வருகிறது என்பது உண்மை. இந்த நிதர்சனத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, மத்திய அரசும், எல்லா மாநில அரசுகளும் முனைந்து செயல்பட்டு நக்ஸல் இடதுசாரி பயங்கரவாதத்தை ஒடுக்கும் வேண்டியது அவசரமும், அவசியமும் ஆகும் என்று இந்து முன்னணி வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறது.

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்